பருத்தித்துறை பிரதேசசபை

யாழ்ப்பாண மாவட்டம்

---------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 01 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 16 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்ரெம்பர் 23 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

--------------------

எனது கணக்காய்வின் மூலம் தென்படுவதும் எனக்கு கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய பருத்தித்துறை பிரதேசசபை 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகள் பேணி வருவருவதுடன் தவிசாளருக்கு என்னால் வழங்கப்பட்ட அறிக்கையில் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்களை தவிர கணக்கீட்டு நியமங்களின்படி பருத்தித்துறை பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------

(அ) நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள், வருமானங்கள் செலவினங்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம | சொத்துக்கள் | | வருமானங்கள் | | செலவினங்கள் | | பொறுப்பக்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப் பங்களின் எண்ணிக் கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங் களின் எண்ணிக் கை | பெறுமதி ரூபா | சந்தர்ப் பங்களின் எண்ணிக் கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்ப ங்களின் எண்ணிக் கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | 02 | 6,119 | 01 | 278,736 | 01 | 450,878 | 01 | 3,466 |
| அதிகரித்துக் கூறல்கள் | - | - | 01 | 2,801,023 | - | - | | |
| வகைப்படுத்தல் வழு | 06 | 183,735 | - | - | | | | - |

(ஆ) மீளாய்வாண்டில் சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 23 வாகன விபரங்கள் இறுதிக் கணக்குகள் 1998ம் ஆண்டில் இருந்து 2011ம் ஆண்டு வரை காட்டப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அவற்றின் பெறுமதிகளும் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

-----------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 29இ069இ134 பெறுமதியுடைய 05 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------------------------

## 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 873இ359 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 24இ040இ350 விளைந்திருந்தது.

## 2.2 நிதிசார் கட்டுப்பாடு

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 25,853,281 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 4இ650இ332 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பந்துள்ளன.

.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான |
|---|---|---|---|

| | | | ----------------------- திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| இறைகளும் வரிகளும் | 28 | 132 | 744 |
| குத்தகை வாடகைகள் | 4,212 | 2,739 | 214 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 374 | 414 | - |
| வேறு வருமானங்கள் | 21,843 | 49,025 | 35,204 |

2.3.2 வருமான நிலுவை

மீளாய்வாண்டில் ரூபா 958,122 பெறுமதியான வீதவரி, வாடகை மற்றும் சந்தை குத்தகை என்பன கடந்த 5 வருடத்திற்குக மேலாக அறவீடு செய்யப்படாத நிலுவை வருமானமாக காணப்படுகின்றது. இவற்றை அறவிட ஆக்கபூர்வமான எந்தவிதமான சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.3 வருமான இழப்பு

1999ம் ஆண்டிலிருந்து மின்சார செயற்பாடுகள் அனைத்தும் இலங்கை மின்சார சபைக்கு பிரதேசசபைகளினால் கையளிக்கப்பட்டபோதும் வீதி விளக்குகள் பொருத்துவதற்காக உள்;ராட்சி ஆணையாளரிடமிருந்து மீளளிப்புப் பெறப்படாது மீளாய்வாண்டில் ரூபா 1,506,750 சபை நிதி மூலம் வீதி விளக்கு பொருத்துவதற்கு செலவிடப்பட்டிருப்பது சபைக்கு வருமான இழப்பினை ஏற்படுத்தியுள்ளது.

2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம்

2012ம் ஆண்டிற்காக நீதவான் நீதிமன்றங்களிலிருந்து பெற வேண்டிய குற்றப்பணங்களும் தண்டப்பணங்களும் ரூபா 6,465,633.33 சபையானது சிட்டையிடப்பட்டு வருமானமாகவும் வருமதியாகவும் கணக்கிடப்பட்டதேயன்றி அறிக்கையிடும் திகதிவரையும் அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.5 முத்திரைத்தீர்வைக் கட்டணம்

---

i. 2012ம் ஆண்டு யூன் மாதத்தின் பின்னரான முத்திரைத்தீர்வைக் கட்டணப் பட்டியல் காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

ii. 2010-2012 யூன் வரையான முத்திரைத் தீர்வைக் கட்டணங்கள் ரூபா 28,737,893 வருமானமாகவும் வருமதியாகவும் கணக்கிடப்பட்டதேயன்றி அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் வருமாறு.

| வருடம் | அறவிடவேண்டிய முத்திரைத் தீர்வை ரூபா |
|---|---|
| 2010 | 8,968,628 |
| 2011 | 13,199,955 |
| 2012 (யூன்) | 6,569,310 |
| | 28,737893 |

2.4 சொத்து முகாமைத்துவம்

---

2.4.1 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

---

சிறு திருத்தங்கள் செய்யப்படுவதற்காக 12 எண்ணிக்கையான வாகனங்கள் பயன்பாடற்று காணப்படுகின்றன.

2.4.2 வருடாந்த இருப்புக் கணிப்பீட்டுச் சபை அறிக்கை

---

2012ம் ஆண்டுக்கான இருப்புக் கணிப்பீட்டுச்சபை அறிக்கையின் பிரகாரம் 08 எண்ணிக்கையான பொருட்கள் பற்றாக் குறையாகவும் 19 எண்ணிக்கையான பொருட்கள் பழுதடைந்து பயன்படுத்தமுடியாத பொருட்களாகவும் காணப்படுகின்றது. பற்றாக்குறையான பொருட்கள் தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

குடத்தனை உப அலுவலக நூல் நிலையத்தில் 85 எண்ணிக்கையான புத்தகங்கள் கணிப்பீட்டு சபை அறிக்கையினால் உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

2.4.3 அறவிடப்படாத ஊழியர் கடன் நிலுவை

--------------------------------------------------------------

சபையின் ஊழியரொருவர் ஒழுக்காற்று நடவடிக்கையினால் 2008ம் ஆண்டிலிருந்து வேலை இடை நிறுத்தப்பட்டுள்ளது குறித்த அலுவலரிடமிருந்து ரூபா 141,150 பதவியினர் கடன் நிலுவை அறவிடப்பட்டிருக்கவில்லை

2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை.

-------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைக்கான பின்வரும் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளன.

| <u>சட்டங்கள் விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு</u> | <u>விபரம்</u> |
| --- | --- |
| (அ) 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபை சட்டம் | |
| (i) அத்தியாயம் ஏ பிரிவு 132 | பிரதேசசபை ஒன்று களியாட்ட விடயங்களுக்காக ஆண்டொன்றிற்கு ரூபா 1,000 இற்கு அதிகமான செலவினத்தை மேற்கொள்ளும்போது அமைச்சரின் முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என்பதற்கு முரணாக நடைமுறையாண்டில் ரூபா 11,305 உபசரணை |

செலவுகளுக்கு அமைச்சரின் முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

| | |
|---|---|
| (ii) அத்தியாயம் ஏ பிரிவு 158(1) | ரூபா 744,165 ஆதனவரி நிலுவை செலுத்தத் தவறியோருக்கு செயலாளரால் ஆணைச்சீட்டு கையெழுத்திடப் பட்டிருக்கவில்லை |

(ஆ) 1988ம் ஆண்டின் பிரதேசசபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி

-------------------------------------------------------

| | |
|---|---|
| (i) அத்தியாயம் ஐஐஐ பிரிவு 70 | நிலுவை வாடகை ரூபா 213,957 தொடர்பில் அனுமதிக்கப்பட்ட காலம் முடிவடைந்த பின்னர் அரசிறை எழுதுனர் தவறுனர் நிரல் தயாரித்து செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் ஐஐஐ பிரிவு 81 | ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் காணிக் கொடுக்கல் வாங்கல்கள் சம்மந்தமான முத்திரை தீர்வைகள் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணங்களின் மீளளிப்பு சம்மந்தமாக நடவடிக்கை எடுக்கத் தவறியமை. |
| (iii) அத்தியாயம் ஏ பிரிவு 140 | உரிய திகதியில் ரூபா 10,171,705 முற்பணம் செலுத்தத் தவறும் போது செயலாளரால் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |

## 2.6 நோக்கத்திற்கு முரணான விடயங்கள்

---------------------------------------------------------------

i. சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீர் மற்றும் சுகாதார வசதி ஏற்படுத்த அரச அதிபர் யாழ்ப்பாணத்தினால் வழங்கப்பட்ட நன்கொடை ரூபா 894,615 குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது மருதங்கேணி கொல்கள அமைப்பிற்கும் அலுவலக கட்டிட அமைப்பிற்கும் இந்நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

ii. 2012ம் ஆண்டிற்கான உள்;ராட்சி மாநாடு கண்காட்சிக்குமாக சபையின் நோக்கம் மற்றும் குறிக்கோள் செயற்பாட்டு அல்லாத மீள் குடியேற்ற மாதிரி

கிராமம் காட்சிப்படுத்திய செலவினமாக ரூபா 24,950 பயன்படுத்தியிருப்பது பயன்படாடற்ற செலவினமாக அவதானிக்கப்பட்டுள்ளது.

2.7 ஓப்பந்த நிர்வாகம்
----------------------------

(அ) சபையின் நடைமுறையாண்டு வரவு செலவுத்திட்டத்தில் அங்கீகரிக்கப்படாத ரூபா 3,509,158 பெறுமதியான 05 மூலதன வேலைகள் எதிர்வரும் காலங்களில் செயற்படுத்துவதற்கென சில்லறைக் கடனாளிகள் கணக்கில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) நடைமுறையாண்டில் செயற்படுத்தவென பாதீடு செய்யப்பட்ட வீதி வேலைகள் சந்தை கடை தொடர் வேலை ஆகிய ஆறு வேலலைகளுக்கான மதிப்பீட்டு செலவினம் ரூபா 6,500,000 பெறுமதியான 06 செயற்திட்டங்கள் முற்றாகக் கைவிடப்பட்டிருந்தன.

2.8 செயற்பாடுகளின் செயற்திறமையின்மை
----------------------------------------------------------------

i. உள்;ராட்சி ஆணையாளரினால் 2009 – 2010 ம் ஆண்டு காலப்பகுதியில் வழங்கப்பட்ட சனசமூகநிலைய நன்கொடைகள் ரூபா 301,516 குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது நானாவித வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ii. 2010-2012ம் ஆண்டுக்கான சுற்றுச்சூழல் உரிமத்திற்கான பரிசோதனைக் கட்டணங்கள் ரூபா 147,265 சுற்றுச்சூழல் பரிசோதனை மேற்கொள்ளப்படாது நானாவித வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்
---------------------------------------------------

பின்வரும் முறைகள், கட்டுப்பாட்டு பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

i. வருமானசேகரிப்பு
ii. நிலையான சொத்துக்கள்
iii. கணக்கீடு
iv. மனிதவள முகாமைத்துவம்
v. நன்கொடை
vi. வாகனங்களின் பயன்பாடு
vii. நானாவித வைப்புக்கள்
viii. வரவு செலவுத்திட்ட கட்டுப்பாடு.